மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 468 /2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சண்முகம் | வயது | ..64 |
| த/பெ. | .. ரங்கசாமி | சாதி | .. |
| கிராமம் | .. சேத்பட் | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

**வா.சா.1 ( குறுக்கு விசாரணை தொடர்ச்சி)**

1. பிரதிவாதி தாக்கல் செய்த **ஒ.எஸ்.287/2008** வழக்கில் 5வது அயிட்டமாக இந்த வழக்கு அ அட்டவணை சொத்தாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு அ அட்டவணை சொத்து சேர்த்துதான் **ஒ.எஸ்.287/2008** முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கபட்டது என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே வழக்கு அ அட்டவணை சொத்து **ஒ.எஸ்.287/2008** வழக்கில் பாகப்பிரிவினை செய்துவிட்டதால் நான் தற்போது உள்ள வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எ மற்றும் பி செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

2. மேற்கூறிய **ஒ.எஸ்.287/2008** எதிர்த்து மனுவும் தாக்கல் செய்யவில்லை மேல்முறையீடு செயயவில்லை என்றால் சரிதான். எந்த மனுவும் மேல்முறையீடு செய்யாததாலும் நான் இந்த வழக்கில் சி பரிகாரம் கேட்பது செல்லதக்கது என்று சொன்னால் சரியல்ல.

நான் **ஒ.எஸ்.287/2008** வழக்கில் நான் லட்சமணன், சரசு, ஆதிலட்சுமி ஆகியோர் வழக்கறிஞர் நியமித்து வக்காலத்து தாக்கல் செய்தோம் ஏ்னறால் சரிதான்.

3. **ஒ.எஸ்.287/2008** எங்களுக்கு சம்மன் பெறப்பட்டதா தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சம்மன் நாங்கள் வாங்கவில்லை, வழக்கிறஞர் எங்கள் நிலத்திற்கு வரும் போது தான் அந்த விவரம் தெரிந்தது. ஒ.எஸ்.287/2008 இறுதிநிலை தீர்ப்பாணையில் மனுவில் **ஐ.எ.628/2009 ல்** வக்காலத்து தாக்கல் செய்து ஆஜரா் என்று சொன்னால் சரியல்ல. என்

தந்தை எனக்கும்,. 2ம் வாதிக்கும் வழக்கு சொத்து தான செட்டில்மெண்ட் வா.சா.ஆ 2 மூலம் கொடுப்பதற்கான காரணம் இல்லாததால் மோசடியாக தயாரித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது ள்ன்று சொன்னால் சரியல்ல.

4. இந்த மோசடியான வா.சா.2 பத்திரத்தில் பயன்படுத்திதான் பட்டா மாறுதல் பெற்றேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குடும்ப சொத்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்து யாருடையது என்றால் என் தந்தை கிரையம் பெற்ற சொத்து. வழக்கு சொத்து கூட்டுகுடும்ப சொத்தா என்றால் சரியல்ல என் தந்தை அவர் சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். ஏற்கனவே வழக்கு சொத்து தொடர்பாக **ஓ.எஸ்.287/2008** தீர்ப்பில் பிறப்பிக்கப்பட்டதால் இந்த வழக்கானது முன்தீர்ப்பு தடைதோசத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. **ஓ.எஸ்.287/2008** பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணை விவரம் எனக்கு தெரிந்து இருந்தும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் வரம்பிற்கு உட்படாதது என்று சொன்னால் சரியல்ல. நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மேலும் நான் வேண்டிய தரப்பினரை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் ள்னறால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை முடிவடைந்தது ).**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.